In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 163/2023 | Prosecution witness P.W.17 |
| Name: Tamilarasi | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 10-06-2025.

**(Accused 1 produced through V.C. A2 died. A3 to A8 are present. A9 absent, petition u/s 355 BNSS. filed and allowed,)**

முதல் விசாரணை

நான் திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2.08.2023ம் தேதியன்று திண்டுக்கல் காவல்துறை கண்காணிப்பாளரிடமிருந்து வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தின்படி திண்டுக்கல் வடக்கு காவல்நிலைய கு.எண.447/2023 தொடர்புடைய TN-57-BQ-6372 என்ற இருசக்கர வாகனம், மற்றும் TN-57-BQ-5801 என்ற இருசக்கரவாகனம் இரண்டுக்கும் பாரம் 24 கேட்டதன் பேரில் பாரம் 24ஐ எடுத்து காவல்துறையில் ஒப்படைத்தேன். பாரம் 24 என்பது பி ரிஜிஸ்டர் எக்ஸ்ட்ராக்ட் ஆகும். அதில் உரிமையாளரின் பெயர், விலாசம், வாகனத்தின் என்ஜின் எண் சேசிஸ் எண் ஆகிய விவரங்கள் கண்டிருக்கும். TN-57-BQ-6372 என்ற இருசக்கர வாகனம் எம்.ஜாஸ்மின், த/பெ முகமது இஸ்மாயில், கதவு எண்.16/18, அரசமரம், 3வது தெரு, பேகம்பூர், பள்ளபட்டி அஞ்சல், திண்டுக்கல்-2 என்றும் TN-57-BQ-5801 என்ற இருசக்கரவாகனம் சகுபர் சாதிக், த/பெ அமீர்பாட்சா, நம்பர் 23, ஜாகீர் உசேன் தெரு, அடியனூத்து அசநாத்திபுரம், பித்தளைப்பட்டி, திண்டுக்கல் 1 என்ற விவரங்கள் கண்டிருந்தது. ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் ஏற்கனவே அதசாஆ.15ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. TN-57-BQ-6372 என்ற இருசக்கர வாகனத்திற்கு நான்

வழங்கிய பாரம் 24 அதசாஆ.17. TN–57–BQ–5801 என்ற இருசக்கரவாகன நான் வழங்கிய பாரம் 24 அதசாஆ.18. இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை– வழக்குரைஞர்கள் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்கள்.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.06.10 16:46:27 +0530

Principal District Judge,
Dindigul.